**கவனிக்க.**-2023.07.14 ஆந் திகதிய 2341 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2342 - 2023 ජූලි මස 21 වැනි සිකුරාදා - 2023.07.21

*2342 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 21ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 224 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**கவனிக்க.**- (i) ஒதுக்கீடு (திருத்தம்) சட்டமூலம் 2023, யூலை மாதம் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் 2023, யூலை மாதம் 07ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(iii) இலங்கை போசணை மருத்துவர்கள் கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2023, யூலை மாதம் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, ஒகத்து மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, யூலை மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


223 - B 082475- 353 (2023/07)

# நானாவித அறிவித்தல்கள்

## இலங்கை கடற்றொழில் மற்றும் நீரியல்வளங்களுக்கான சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*நாலக கொடஹேவா ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "இலங்கை கடற்றொழில் மற்றும் நீரியல்வளங்களுக்கான சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்ட மூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

*பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த சங்கத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்ட மூலத்தின் நோக்கமாகும்:*

*(அ) இலங்கையில் கடற்றொழில், நீரியல் வளங்களின் ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோர் மத்தியில் பயனுள்ள தொடர்பையும் ஒத்துழைப்பையும் மேம்படுத்தல்;*

*(ஆ) இலங்கையில் அத்தகைய நடவடிக்கைகளில் கரிசனை கொண்ட அரச சார்புள்ளதும், அரச சார்பற்றதுமான அமைப்புடன் தொடர்புகொண்டு ஒத்துழைப்பு வழங்குதல்;*

*(இ) நீரியல் வளங்களை அபிவிருத்தி செய்தல், பேணுதல் தொடர்பான விடயங்கள், கொள்கைகளை விஞ்ஞானிகளும் வேறு ஆளணியினரும் ஆலோசிப்பதற்கான ஒரு அமைப்பாகச் சேவையாற்றுதல்,*

*பிறவும்.*

*நாலக கொடஹேவா,*
*பாராளுமன்ற உறுப்பினர்.*

*07- 334*

---

## விவசாய தொழில்முனைவோர் பேரவையை (SLAF) கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*மைத்திரீபால சிறிசேன ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "விவசாய தொழில்முனைவோர் பேரவையை (SLAF)கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்ட மூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

*பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த பேரவையைக் கூட்டிணைப்பதே இச்சட்ட மூலத்தின் நோக்கமாகும்:*

*(அ) இத்துறையின் உயர்வை நோக்கி, தொலைநோக்கு எண்ணக்கரு மற்றும் நடைமுறைகளினூடாக விவசாய வணிகத்துறை மற்றும் விவசாய வணிகத்துறையில் ஈடுபாடுள்ளவர்களின் முன்னேற்றத்துக்காக வினையூக்கியாக, மதியுரையகமாக செயற்படுதல்;*

*(ஆ) தொழில்நுட்பவியல் கண்காணிப்புக் குழுவாக சேவையாற்றுதல், புத்தாக்க, நவீன, செயல்திறன்மிகு விவசாய முறைகளை பகிர்ந்துகொள்ளுதல், விவசாய வணிக அபிவிருத்தி மற்றும் தொடர்புள்ள நடவடிக்கைகளை முன்னேற்றுதல்;*

*(இ) விவசாய, வணிகத்துறையைச் சார்ந்த அனைத்து விடயங்களிலும் கொள்கைகள், வழிகாட்டல்கள், நடப்பு விதிமுறை, தரப்படுத்தல், ஆராய்ச்சியும் மேம்பாடும் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றைத் தயாரிப்பதற்காக ஆலோசனை சேவைகளை வழங்குதல்,*

*பிறவும்.*

*மைத்தரிபால சிறிசேன ,*
*பாராளுமன்ற உறுப்பினர்.*

*07- 211*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.